# நோயாளிக்குத தகவல்

## சிகிச்சை மருந்து:

# நீரிழிவு

- சல்ஃபோனிலூரியாஸ்
- மெக்லிட்டினைட்ஸ்
- பைகுவானைட்ஸ்
- தியாஸோலிடினிடியன்ஸ்
- அல்ஃபா - குளுகோஸிடேஸ் இன்ஹிபிட்டர்ஸ்



**Medicine To Treat: Diabetes** - Sulphonylureas, Meglitinides, Biguanides, Thiazolidinediones and a-Glucosidase Inhibitors

## உங்கள் மருந்து விவரம்

| மருந்து | எனக்கு தரப்பட்டுள்ள மருந்து எவ்வாறு பயனளிக்கிறது? | மருந்தை நான் எவ்வாறு உட்கொள்ள வேண்டும்? |
|---|---|---|
| **சல்ஃபோனிலுாரியாஸ்**<br>எ.கா:<br>குளோர்புரோப்பமைட்<br>கிளிபென்கிளமைட்<br>கிளிக்ளஸைட்<br>டோல்புடமைட்<br>கிளைமீபிரைட் | கணையம் அதிக இன்சுலினை சுரந்து வெளியிட உதவுகிறது | மாத்திரையை(களை)தினமும் சாப்பாட்டுக்கு அரைமணி நேரத்திற்கு முன் உட்கொள்ளுங்கள்.உணவை தவிர்க்கவோ, தாமதிக்கவோ வேண்டாம். |
| **மக்லிட்டினைட்ஸ்**<br>எ.கா: ரிபாகிளினைட்<br>நேடிகிளினைட் | கணையம் அதிக இன்சுலினை சுரந்து வெளியிட உதவுகிறது | ஒவ்வொரு முக்கிய உணவுக்கு முன்னும் உடனடியாக இந்த மாத்திரையை(களை) உட்கொள்ளுங்கள் |
| **பைகுவானைட்ஸ்**<br>எ.கா:<br>மெட்ஃபார்மின் | இன்சுலினை உடல் மேலும் திறனுடன் பயன்படுத்திக் கொள்ள உதவுகிறது | மாத்திரையை(களை) உணவுடன் அல்லது உணவுக்குப் பின் உட்கொள்ளுங்கள் |
| **தியாஸோலிடைன் டியோன்ஸ்**<br>எ.கா:<br>ரோஸிகிளிட்டாஸோன் | இன்சுலினை உடல் மேலும் திறனுடன் பயன்படுத்திக் கொள்ள உதவுகிறது | உணவுடன் அல்லது மற்ற சமயங்களில் உட்கொள்ளலாம் |
| **அல்ஃபா குளுகோஸிடேஸ் இன்ஹிபிட்டர்ஸ்**<br>எ.கா: அகார்போஸ் | உணவுக்குப் பிறகு இரத்த சர்க்கரை அளவு உடனடியாக அதிகரிப்பதைத் தடுக்க உதவுகிறது | முதல் கவளத்தை உண்ண ஆரம்பித்ததும் அல்லது உடனடியாக மூன்றுவேளை முக்கிய உணவுக்கு முன்னும் உட்கொள்ளுங்கள் |

*குழந்தைகளுக்கு எட்டாத இடத்தில் மருந்துகளை வைத்திருங்கள்*

## இந்த மருந்துகளின் சாத்தியமான பக்க விளைவுகள் யாவை?

### 1. இரத்த சர்க்கரை அளவு குறைதல் (ஹைப்போகிளைசிமியா)

நீங்கள் உரிய நேரத்தில் உண்ணாமல் மருந்தை மட்டும் உட்கொண்டால், உங்கள் இரத்த சர்க்கரையின் அளவு மிக அதிகமாகக் குறைந்துவிடும். அதனால் சோர்வு, தலைசுற்றல், பசி, வியர்ப்பு, நடுக்கம், பார்வை மங்கல், நடை தடுமாற்றம் அல்லது வேகமான இதயத்துடிப்பு ஆகியவை ஏற்படும்.

உங்களுக்கு இந்த அறிகுறிகளில் ஏதேனும் ஏற்பட்டால், குளுகோஸ் மாத்திரைகள் அல்லது அரை குவளை பழச்சாறு அல்லது 2-4 தேக்கரண்டி சீனி, தேன், சுவை நீரை உடனடியாக உட்கொள்ளுங்கள். சுமார் 15 நிமிடங்களில் நிலைமை சீரடைந்திருப்பதை உணர்வீர்கள். அறிகுறிகளில் முன்னேற்றம் இல்லாவிட்டால் உடனடியாக உங்கள் மருத்துவரிடம் அல்லது ஒரு மருத்துவமனைக்குச் செல்லுங்கள்.

### 2. வயிற்றுக் கோளாறு/ உப்பல் அல்லது வாயுத் தொல்லை/ வயிற்றுப் போக்கு

இந்த அறிகுறிகளும் ஏற்படலாம். இந்த அறிகுறிகள் எதுவும் கடுமையாக அல்லது நீங்காமல் இருந்தால் உங்கள் மருத்துவரின் ஆலோசனையை நாடுங்கள்.

### 3. குமட்டல் அல்லது வாந்தி/ பசியின்மை

மெட்ஃபார்மின், ரிபாகிளினைட், நேட்கிளினைட் அல்லது ரோஸிகிளிட்டாஸோன் மருந்துகளை நீங்கள் உட்கொண்டால் இந்த அறிகுறிகளை அனுபவிப்பீர்கள். இவற்றை உணவுக்குப் பிறகு அல்லது உணவுடன் உட்கொண்டால் இந்த அறிகுறிகளை குறைக்க உதவும். இந்த அறிகுறிகள் எதுவும் கடுமையாக அல்லது நீங்காமல் இருந்தால் உங்கள் மருத்துவரின் ஆலோசனையை நாடுங்கள்.

### 4. தோல் சொறி

இந்த மருந்துகளை உட்கொள்ளும் சமயங்களில் உங்களுக்கு தோலில் சொறிகள் ஏற்படலாம். சொறிகள் தென்பட்டால் உடனடியாக உங்கள் மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

## எத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கையை நான் பின்பற்ற வேண்டும்?

மருந்து உட்கொள்வதற்கு முன் கீழ்க்கண்ட அறிகுறிகள் இருந்தால் உங்கள் மருத்துவரிடம் தெரிவியுங்கள்:

- ☐ இம்மருந்தோ அல்லது மற்ற மருந்துகளோ உங்களுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தும் என்றால்.
- ☐ பரிந்துரைக்கப்பட்ட மற்ற மருந்துகள் மற்றும் பரிந்துரைக்கப்படாத மருந்துகளை நீங்கள் உட்கொண்டு வந்தால்.
- ☐ உங்களுக்கு இதயம், சிறுநீரகம் அல்லது கல்லீரல் பிரச்சினை இருந்தால்.

*காலாவதியான அல்லது இனியும் தேவைப்படாத மருந்துகளை ஒதுக்கி விடுங்கள்*

- ☐ நீங்கள் அறுவை சிகிச்சை செய்து கொள்ளயிருந்தால்.
- ☐ நீங்கள் கருவுற்றிருந்தால் அல்லது கருவுறத் திட்டமிட்டிருந்தால்.
- ☐ நீங்கள் தாய்ப்பால் ஊட்டிக்கொண்டிருந்தால்.

## மருந்து உட்கொள்ளும் காலத்தில் நான் என்ன செய்யவேண்டும்?

- ☐ மருந்தின் பெயரையும் நீங்கள் உட்கொள்ளும் அளவையும் அறிந்திருக்க வேண்டும்.
- ☐ உங்கள் மருந்தை முறையாகவும் மருத்துவர் பரிந்துரைத்த சரியான அளவிலும் உட்கொள்ளவேண்டும்.
- ☐ உங்கள் மருத்துவரின் ஆலோசனையைப் பெறாமல் மருந்து உட்கொள்வதை நிறுத்தி விடாதீர்கள்.
- ☐ நீங்கள் ஒருவேளை மருந்தை உட்கொள்ள மறந்தால் நினைவு வந்ததும் உடனடியாக எடுத்துக் கொள்ளுங்கள். அடுத்தவேளை மருந்துக்குரிய நேரம் வந்துவிட்டால், அந்த வேளைக்குரிய வழக்க அளவை மட்டும் உட்கொள்ளுங்கள். இருமடங்கு வேண்டாம்.
- ☐ உணவு உட்கொள்ளாமல் மதுபானத்தை மட்டுமே அருந்தினால் இரத்த சர்க்கரை அளவு மிகவும் குறைந்துவிட நேரும்.
- ☐ இரத்தச் சர்க்கரையை உங்கள் மருத்துவர் அறிவுரையின்படி சோதித்துக்கொள்ளுங்கள்.
- ☐ வேறு மருத்துவரிடம் நீங்கள் சென்றால், நீங்கள் உட்கொண்டு வரும் மருந்தின் விவரத்தை மறைக்காமல் கூறுங்கள்.
- ☐ நீங்கள் மெட்ஃபார்மின் உட்கொண்டு வந்தால் ஸ்கேன் அல்லது எக்ஸ்ரே சோதனைக்கு முன் உங்கள் மருத்துவரிடம் தெரிவியுங்கள். சோதனைக்கு சில தினங்களுக்கு முன்பே அந்த மருந்தை நீங்கள் நிறுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படலாம்.

## மருந்துகளை நான் சேமித்து வைப்பது எப்படி?

- ☐ குளிர்ச்சியான, உலர்ந்த இடத்தில் வைக்க வேண்டும்.

  வெவ்வேறு விதமான மருந்துகளை ஒரே உறை, கலத்தில் சேர்த்து வைக்காதீர்கள். ஒவ்வொரு மருந்தையும் அதற்குரிய ஒட்டுவில்லையுடைய உறை, கலத்தில் வைத்திருங்கள்.

SingHealth  Ministry Of Health  National Healthcare Group
Printed in 2002